**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 169/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருசாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 15th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>மனுவின் பேரில் சாட்சி ஆஜராகி, 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கில் காயம்பட்ட ராஜேஸ்வரி மற்றும் வள்ளியம்மாள் காயம்படும்போது, நான் வீட்டில் இல்லை என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும் போதும், சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று தான் கூறினேன். எங்கள் வீட்டில் நானும், எனது அம்மா, எனது மனைவி மற்றும் எனது 3 பிள்ளைகளும் வசித்து வருகிறோம். சம்பவம் நடக்கும் போது, எனது மூத்த மகளுக்கு 13 வயது, இளைய மகளுக்கு 12 வயதானது. சம்பவம் நடக்கும் போது, எனது தாயார், மனைவி மற்றும் பிள்ளைகள் வீட்டில் இருந்தார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட ராஜேஸ்வரிக்கு மரைக்காயர் வீட்டுத்தெருவில் வீடு கிடையாது என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும் போது, ராஜேஸ்வரிக்கு 2 கைகள் மற்றும் தொடையில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாக நான் கூறவில்லை என்றால்

சரியல்ல. வள்ளியம்மாளுக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டதாகவும் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரிக்கும் போது, ராஜேஸ்வரிக்கு இடது முழங்கை மற்றும் முழங்கைக்கு மேல் வெட்டுக்காயம் ஏற்பட்டதாக நான் கேள்விபட்டதாக போலீசாரிடம் கூறினேன் என்றால்  சரிதான். எதிரிகள் இருந்த வீடு தற்போது சும்மா தான் கிடக்கிறது. நான் முதல் விசாரணையில் கூறியது போல், சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சிவக்குமார் மற்றும் வெள்ளத்தாய் ஆகியோர் எங்களுக்கு ஒன்றுவிட்ட பங்காளிகள் என்றால் சரிதான். எங்களுக்கு பொதுவாக 3 கிணறுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த பொதுகிணறுகளில் இருந்து இலவச மின்சாரம் மூலம் பங்காளிகளாகிய நாங்கள் அனைவரும் முறை வைத்து தண்ணீர் பாய்ச்சி வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் கூடுதல் நேரம் தண்ணீர் பாய்ச்சுகிறோம் என்று 1, 2 எதிரிகள் கூறியது சம்பந்தமாக எனக்கு அவர்கள் மீது மனவருத்தம் இருந்தது என்றால் சரியல்ல. ராஜேஸ்வரி மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர், இராஜேஸ்வரி வீட்டின் முன்பு வைத்து, அவர்களுக்கு மட்டும் தெரிந்த ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டதாக நான் கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் மீது எங்கள் குடும்பத்திற்கு சொத்து சம்பந்தமாக இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்து கொண்டு, 1, 2 எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி மற்றும் எனது தாயாரை

போலீசார் இந்த வழக்கில் விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. நான் வெளியூர் சென்றதினால் எனது மனைவி மற்றும் எனது தாயாரை போலீசார் விசாரித்தார்களா? என்று எனக்கு உறுதியாக தெரியாது என்றால் அவர்களை போலீசார் விசாரிக்கவில்லை.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.21 15:32:59 +0530